கணபதியின் பதிலுக்குக் காத்திராமல் 'விர்' என்று மறு பக்கம் நடந்து சென்றாள்.

எதிரே வந்து கொண்டிருந்த அத்தான் சுந்தரமூர்த்தி யைக் கண்டதும் புன்னகையுடன் நின்றாள்.

# தேவகியின் கணவன்

லலிதா சிட்டுக் குருவியைப்போல் மாடியறைக்கும் கீழ்க்கூடத்திற்குமாக அடிக்கொரு தடவை ஓடிக்கொண் டிருந்தாள். ''இதை எடுத்துக்கொள்ள மறந்துவிட்டேன், அக்கா!'' என்று உற்சாகத்துடன் அவள் கூவிக்கொண்டு மறதியில் விட்டுப்போன சாமான்களை நினைத்துக் கொண்ட போதெல்லாம் தேடித்தேடி எடுத்து வைத்துக் கொண்டிருந்தாள். பம்பாயிலிருந்து தன் கணவன் தன்னைப் புக்ககம் அழைத்துப் போகத் தானே நேரில் வந்திருக்கிறான் என்ற குதூகலத்தில் அவளுக்கு இது பூலோகமா, ஸ்வர்க்கமா என்று மிகவும் குழப்பமாக இருந்தது இயற்கைதானே!

தங்கையின் மன மகிழ்ச்சியையும், மிதமிஞ்சிய உற்சா கத்தையும் ஜாடையாகக் கவனித்துக் கொண்டிருந்த தேவகி, சமையலறையில் புது மாப்பிள்ளைக்குத் தாயார் செய்துகொண்டிருந்த விருந்தில் உதவி செய்துகொண்டி ருந்தாள். கூடத்துக் கடிகாரம் மணி பதினொன்று அடித் ததைக் கேட்டதும் கையில் வைத்திருந்த பாத்திரத்தைக் கீழே வைத்துவிட்டு வாயிற்புறம் ஓடி வந்து பார்த்தாள். வழக்கம்போல் அன்றும் காலை பதினொரு மணிக்குத் தபால்காரன் தெருக்கோடியில் வந்துகொண்டிருந்தான். ஒவ்வொரு வீடாக அவன் நுழைந்து வெளியே வருவதற்குள் தேவகிக்கு ஒரு யுகம்போலத் தோன்றியது. தங்கம் வீட்டின் பக்கம் தபால்காரன் வருவதைக் கண்ட அவள் இருதயம் படபடவென்று துடித்துக்கொண்டது. முகம் கும்பென்று ஒரு தடவை வேர்த்தது. தபால்காரனோ அவள்



நிற்பதையே கவனிக்காதவன்போல் அடுத்த வீட்டிற்குப் போய்க்கொண்டிருந்தான். ''நமக்கு ஒன்றும் கிடை யாதா?'' என்று உரத்த குரலில் கூப்பிட்டுக் கேட்டாள் தேவகி.

''இல்லையம்மா; இருந்தால் கொடுத்துவிட்டுப் போக மாட்டேனா?'' என்று திரும்பிப் பார்த்த தபால்காரன் பதில் அளித்தான். அவன் குரலில் தொனித்த இரக்கம் தேவகியின் மனத்தைக் குத்திக்கொன்றது. தபால்காரன் கூடத் தன் நிலைக்குப் பரிதாபப்படும்படி தன்னைக் கேவலப்படுத்திவிட்ட கணவன்மீது அவளுக்குக் கோபம் தாங்க முடியாது பொங்கி எழுந்தது. அங்கிருந்து திரும்பி யவள் நேரே சமையலறைக்குப் போகாது மாடிப் பக்கம் சென்றாள். கணவனிடமிருந்து அன்றும் கடிதம் வராதத னால் ஏற்பட்ட ஏமாற்றம் கண்ணீராக அவனது அகன்ற விழிகளில் பொங்கிக்கொண்டு நின்றதை எங்கே தங்கையும் தாயும் பார்த்து விடுவார்களோ என்று பயம் அவளுக்கு.

மாடியறைக்குள் சென்றதும், அதுவரை கட்டில் இருந்த துக்கம் அடுக்கடுக்கான விம்மல்களாக அவளது இருதயத்திலிருந்து பீறிக்கொண்டு எழுந்தது.

ஒரு நாள் இரண்டு நாள் என்றால் தேவகி பொறுத்துக் கொள்வாள். விளையாட்டைப்போல் அவள் பிறந்தகம் வந்து ஒரு மாதத்திற்கு மேலாகிவிட்டது. நாகராஜனிட மிருந்து ஒரு கடிதங்கூட அன்று வரை வரவில்லை என்றால் அவள் மனநிலை எப்படி இருக்கும்! அவன்தான் ஆகட்டும், மனைவி வருந்துவாளே என்ற கருணையினால் கடிதம் போடாவிட்டாலும், 'மாப்பிள்ளை ஏன் கடிதம் போட வில்லை?'' என்று வேட்டகத்தில் எல்லோரும் மதனியைக் கேட்டு உபத்திரவப் படுத்துவார்களே என்ற மரியாதைக் காவது ஒரு கடிதம் போடக் கூடாதா!

தேவகிக்குக் கல்யாணமாகி வருஷங்கள் மூன்று சென்று

விட்டன. புக்ககம் வந்து இரண்டரை வருஷங்களுக்குமேல் ஆகியும் அவளுக்குத் தன் கணவரின் மனநிலை இன்னும் சரியாக விளங்காமலே இருந்தது!

நாகராஜன், அவள் கணவன் 'ஸையைத் பெண்ஸில் கம்பெனி'யாரின் மானேஜிங் டைரக்டர். பேட்டையூர் ரெயில்வே ஸ்டேஷன் அருகில் ஒரு பர்லாங் தூரத்தில் தோட்டத்திற்குள் அமைந்திருந்த சிறு பங்களா அவனுக்குச் சொந்தமாயிருந்தது. சொந்த வீடு, மாதம் அரை ஆயிரம் சம்பளம், பிக்கல் பிடுங்கல் ஒன்றும் கிடையாது. உயிருடன் இருக்கும் வயதான தாய்கூட ஆறுமாத காலம் நாகராஜ னிடமும் ஆறுமாத காலம் அவன் தமையனிடமுமாக மாறி மாறி விக்கிரமாதித்த ராஜாவைப்போன்று வாசம் செய்து வந்ததனால், தேவகிக்கு மாமியாரின் தொந்தரவும் இல்லாத நிச்சிந்தையான வாழ்க்கை. இவ்வளவு சௌகரியங்கள் இருந்தும் அவளுக்கு வாழ்க்கையில் ஒரு பெரும் குறை இருக்கத்தான் இருந்தது. அதுதான் அவள் கணவன் நாகராஜனின் மனப்போக்கு.

நாகராஜன் ஒருவித விசித்திரமான மனிதனாக இருந் தான். இரண்டரை வருஷம் நெருங்கிப் பழகியும், தேவகி யால் அவனது மனப்போக்கை முழுவதும் புரிந்து கொள் ளவே முடியாதிருந்தது. 'லலிதா! லலிதா!' என்று தங்கையின் கணவன் வந்த இரண்டு நாட்களில் எத்தனை தடவை தன் மனைவியின் பெயரைச் சொல்லி அழைத் திருப்பான்! தேவகி கண்ணீரைத் துடைத்துக்கொண்டாள். தன் தங்கையின் கணவனுக்கும் தன் கணவனுக்கும் எத்தனை வித்தியாசம் என்று ஆராய்ச்சியில் ஈடுபட்டது அவளது உள்ளம்.

லலிதாவின் கணவன், கல்யாணமாகி ஆறுமாதத் திற்குள் எவ்வளவு கடிதங்கள் மனைவிக்கு எழுதிவிட்டான்! கல்யாணமான புதிதில் தம்பதிகள் அப்படித்தான் இருப்



பார்கள் என்று சொல்லிவிட முடியாது. ஏன்? தேவகிக்குக் கல்யாணமாகிப் பிறந்தகத்தில் சில காலம் தங்கியிருந் தாளே, அந்தக் காலத்தில் நாகராஜன் எழுதியவை இரண்டே இரண்டு கடிதங்கள்தான்!

புதிதாக மணந்துகொண்ட மனிதனிடம் காணப்படும் உற்சாகமும் குதூகலமும் தேவகி புக்ககத்திற்கு வந்த புதிதில் நாகராஜனிடம் காணப்படாதது அவளுக்கு மிகவும் ஆச்சரியமாகத்தான் இருந்தது.

''நம்மை அவருக்குப் பிடிக்கவில்லை போலிருக்கிறது. அதனால்தான் வாழ்க்கையில் இந்த அசிரத்தை'' என்று எண்ணி முதல் சில மாதங்கள் மனம் வெம்பிப் புண்ணா னாள் தேவகி. தேவகிதான் என்ன? அப்படி ஓர் அழகற்ற பெண்ணா? உண்மையைச் சொல்லப் போனால் சகோதரி கள் இருவரில் மிகவும் அழகி தேவகிதான். சிவந்த மேனி, சுருண்ட கூந்தல், அகன்ற பெருவிழிகள், முத்துப் போன்ற வரிசைப்பற்கள். இத்தனை அழகியான மனைவியை அடைந்ததற்கு நாகராஜன் பெருமைப்பட்டவனாகவோ கர்வப்பட்டவனாகவோ காணப்படவில்லை. நாகராஜன் உணர்ச்சியற்ற மனிதனோ என்னவோ என்றுகூடச் சில சமயம் தேவகி ஆச்சரியப்பட்டதுண்டு. ஆனால், அதை இல்லை என்றுநிரூபிக்கிறவன்போல் மிகவும் சந்தோஷமாகச் சில சந்தர்ப்பங்களில் அவன் மனைவியிடம் மிகுந்த அன்பு காட்டுவதுண்டு. ''தேவகி! இன்றைக்கு நம்ப ரெண்டு பேரும் சினிமாவுக்குப் போகலாமா? உம்!'' என்று கொஞ்சும் குரலில் அவன் அழைப்பான். ஆனால், அத்தி பூத்தது போன்றே இப்படி அவனது அன்பு வெளியே தோன்றும்.

தேவகிக்குக் கடைசியாகத் தன் கணவனின் விசித்திர மனப்போக்கைப் பற்றி ஒருவித சந்தேகங்கூடத் தோன்றி யது. அவன் கலாசாலையில் படித்தபோது எவளாவது ஒரு பெண்மீது காதல் ஏற்பட்டு, அது கைகூடாத வருத்தத்தி

னால் தன்மீது இந்தப் பாராமுகமோ என்றுகூட எண்ணி னாள். அது மிக்க ஆதாரமற்ற சந்தேகம் என்று அதைச் சீக்கிரத்தில் கைவிட்டாள்.

தேவகி மிகுந்த பொறுமைசாமி. இல்லாவிடில் அவளது ஸ்தானத்தில் மட்டும் வேறு ஒரு பெண் இருந்திருப்பாளா னால், நாகராஜனுடன் தினம் நூறு தடவை சண்டை போட்டு வாழ்க்கையை விரஸப்படுத்திக்கொண்டிருப்பாள். ஒவ்வொரு சந்தர்ப்பத்தின்போதும் 'அவருக்குத் தெரிந்த லக்ஷணம்' என்று கணவனை மன்னித்துவிட்டுத் தன் துக்கத்தை மனத்திலே அடக்கிக்கொள்வது தேவகிக்கு வழக்கமாகி விட்டது. எனினும் பொறுமைக்கும் ஓர் எல்லை உண்டல்லவா?

பிறந்தகத்திற்கு வந்தது பெரும் தவறு என்று எண்ணிக் கடைசியில் பெருமூச்செறிந்தாள் அவள். ஆமாம்; அவள் திடீரென்று கிளம்பி வந்தது தவறுதான்! ஆனால் அந்தத் தப்பை அவள் செய்யும்படி தூண்டியது யார்? தேவகியின் கணவன்தானே! ஆகவே, பிசகு அவனைத்தான் சாரும்.

ஒரு மாதத்திற்கு முன்பு நடந்த அந்தச் சிறு சம்பவம் இன்று நடப்பது போன்று தேவகியின் மனக்கண் முன் வந்து நின்றது. ஆபீஸிலிருந்து அப்பொழுதுதான் நாகராஜன் வந்திருந்தான். ''எங்கம்மாவுக்கு உடம்பு சௌக்கியம் இல்லையாம். போய்ப் பார்த்துவிட்டு நாலு நாட்களில் திரும்பி வந்து விடலாம் என்று நினைக்கிறேன்'' என்று ஆரம்பித்தாள் தேவகி.

நாகராஜன் பதில் ஏதும் சொல்லவில்லை.

''இவ்வளவு கிட்டத்தில் இருந்துகொண்டு நான் போய் அம்மாவைப் பார்க்காவிட்டால் நன்றாயிருக்குமா? ராத்திரி ரெயிலிலே ஏற்றி விடுங்கள். இன்றைக்குப் புறப்பட்டு வருவதாக நான் ஒரு கடிதம் போட்டிருக்கிறேன். அப்பா



ஸ்டேஷனுக்கு வந்து காத்துக் கொண்டு இருப்பார்'' என்றாள். அவள் கடைசியாகச் சொன்னது ஒரு பொய். தான் வருவதாகத் தன் தந்தைக்கு அவள் கடிதம் எழுதவே இல்லை. 'நீ போகக் கூடாது. உன்னை விட்டு நான் எப்படிப் பிரிந்து இருப்பேன்!' என்று அவன் சொல்வான் என்று அவள் மனம் மிகவும் எதிர் பார்த்தது. அதற்குப் பதில் அவன் மேலும் சிறிது நேரம் மௌனமாக இருந்து விட்டு, ''சரி, போய் விட்டு வா. அப்பா ஸ்டேஷனுக்கு வந்திருப்பார் என்றால் கவலை விட்டது எனக்கு'' என்று பதில் அளித்தான்! கணவனின் பதிலைக் கேட்ட தேவகிக்கு ஏமாற்றம் சொல்லி முடியாது பல்லைக் கடித்துக்கொண்டு அன்று பிரயாணப்பட்டாள் அவள்.

''தனியாகவா வந்தாய்!'' என்று ஆச்சரியப்பட்ட பெற்றோர்களுக்கு ஏதோ நொண்டிச் சமாதானத்தைச் சொல்லிவிட்டு, 'கணவன் கடிதம் போட்டும், நன்றாக வைது பதில் போடவேண்டும்' எனக் கறுவிக்கொண்டு காத்திருந்தாள் தேவகி. ஒவ்வொரு நாளும் ஏமாற்றத்திலே கழிந்துகொண்டு சென்றது. 'மனைவி தனியாகச் சென் றாளே! ஊர் போய்ச் சேர்ந்தாளா, எப்பொழுது வருவாள்?' என்று தெரிந்துகொள்ள நாகராஜன் முயற்சி செய்தானா? இல்லை! இப்படியும் ஒரு மனிதன் உண்டா!

பலவாறு எண்ணி வேதனையுடன் அவள் உட்கார்ந் திருக்கையில், ''அக்கா, கதவைத் திற. நேரமாச்சே! சாப்பிட வாயேன்! நாங்க உடனே டிரெயினுக்குக் கிளம்ப ணுமே!'' என்று லலிதா வேகமாகக் கதவைத் தட்டினாள். உணர்வு பெற்ற தேவகி திடுக்கிட்டுக் கதவைத் திறந்தாள். சிவந்திருந்த அவளது கண்களைக் கூர்ந்து நோக்கிய லலிதா விஷயத்தை க்ஷணத்தில் ஊகித்துக்கொண்டு விட்டாள். ''அக்கா, நான் இன்றைக்கு ஊருக்குப் போகிறேன். நீ அழுதுகொண்டு இருந்தால் என் மனம் கஷ்டப்படும்.

அத்திம்பேருக்கு வேலை அதிகமாக இருக்கும். அதனால் தான் லெட்டர் போடவில்லை. நாளைக்குக் கட்டாயம் வரும். பார்த்துக்கொண்டே இரு!'' என்று பிரியமாகக் கூறி, அவள் கரங்களைப் பற்றி வெளியே இழுத்தாள்.

லலிதா ஊருக்குக் கிளம்பிச் சென்றவுடன் தேவகிக்குப் பிறந்தகத்தில் இருப்புக் கொள்ளவில்லை. தான் உடனே புறப்பட்டு அன்று ரயிலில் வருவதாகவும், காலை பத்து மணிக்கு ஸ்டேஷனில் வந்து சந்தித்து அழைத்துப் போக வேண்டும் என்றும் ஒரு கடிதத்தைக் கணவனுக்கு எழுதித் தபாலில் சேர்த்தவுடன் ஊருக்குக் கிளம்பச் சாமன்களைக் கட்ட ஆரம்பித்தாள் அவள்.

''இன்னும் இரண்டு நாள் இருந்துவிட்டுப் போகக் கூடாதா, தேவகி? லலிதா ஊருக்குப் போனதும் வீடே வெறிச்சென்று இருக்கிறது. உன் அப்பாவுக்கு ஜலதோஷமும் ஜுரமுமாக இருக்கிறது. அவர்கூட வருவதற்கில்லை!'' என்று தாய் கோபித்துக்கொண்டாள்.

''இனி ஒருநாள் கூட இங்கே இருந்தா அவர் கோபித் துக்கொள்வார். நான் உடனே புறப்பட்டு வரவில்லை என்ற கோபத்திலேதான் அவர் கடிதமே போடவில்லை, அம்மா! அன்றைக்கு நான் தனியாக இங்கே வரவில்லையா? அதுபோல் திரும்பிப் போய்விடுகிறேன்'' என்று ஒரே பிடிவாதமாகப் பயணமாய் விட்டாள்.

பெண்கள் வண்டியில் ஜன்னல் ஓரமாக உட்கார்ந் திருந்த அவளுக்கு இரவெல்லாம் தூக்கமே வரவில்லை.

ஒரு மாதம் வரை ஏன் கடிதம் போடவில்லை? கோபமா அல்லது அசிரத்தையா? ஒரு சமயம் உடம்புக்கு அசௌகரியமோ? என்ன அசட்டுத்தனம்! அவர்தான் அப்படி இருக்கிறார் என்றால் மனைவி என்ற அவள் கணவனை ஒரு மாதம் ஹோட்டலில் சாப்பிடும்படி தனியே தவிக்கவிட்டுச் சென்றது எவ்வளவு மதியீனம்!— பலபல



எண்ணித் தவித்த அவள், தூங்காது பொழுதைக் கழித்தாள். காலை பத்து மணிக்கு வண்டி ஸ்டேஷனை அடைந்ததும், வண்டியினின்று மிகவும் பரபரப்பாக இறங்கிய தேவகி ஸ்டேஷனில் சுற்றுமுற்றும் பார்த்தாள். அவள் கடிதம் போட்டிருந்தும் நாகராஜன் ஸ்டேஷனுக்கு வரவில்லை.

நிலைமையைச் சமாளித்துக்கொண்டு, சாமானைத் தூக்கிப் போர்ட்டர் தலையில் வைத்துக்கொண்டு பங்களாவை நொடிப் பொழுதில் அடைந்தாள். நேரே போனதும் கோபம் அடங்குமுன் ஒருதடவை நன்றாகச் சண்டையிட்டுவிட்டுத்தான் மறுவேலை என்று ஆத்திரத் துடன் உள்ளே நுழைந்த அவள் ஸ்தம்பித்துப் போனாள். பங்களாவின் முன் ஹாலைத் தவிர மற்ற அறைகள் யாவும் பூட்டியிருந்தன.

''நீங்க வந்துட்டீங்களாம்மா! ஐயா இன்னிக்குக் கலெக்டர் வீட்டுக் கல்யாணத்துக்குப் போயிருக்கிறாரே, சாப்பிட்டுவிட்டு வர மணி இரண்டாகுமே. நான் போய்ச் சாவி வாங்கிட்டு வரட்டுங்களா?'' என்று வேலைக்காரன் பல்லை இளித்தான்,

களைப்புடன் சோபாவில் சாய்ந்துகொண்ட தேவகி சற்று யோசித்தாள். ''வேண்டாம், அவர் மெதுவாக வரட்டும்'' என்று உத்தரவிட்டுவிட்டு, இரவெல்லாம் கண் விழித்து வந்தவளாகையால், தன்னையும் அறியாமல் அப்படியே தூங்கிவிட்டாள்.

திடுக்கிட்டு விழித்துக்கொண்ட அவள், சோபாவின் அருகே தன் கணவன் நிற்பதைக் கண்டாள். ''என்ன தூக்கம் அப்படி! ராத்திரி வண்டியிலே ரொம்பக் கூட்டம் போலிருக்கிறது. மணி இப்ப என்ன தெரியுமா?'' என்று நாகராஜன் கேட்டுப் புன்னகை செய்தான்.

''கலெக்டர் வீட்டுக் கல்யாணத்திலிருந்து இரண்டு மணிக்கு மேல்தான் நீங்கள் வருவீர்கள் என்று வேலையாள்

சொன்னான். நீங்கள் வந்திருப்பதிலிருந்து மணிஇரண்டுக்கு மேலிருக்கும் என்று நினைக்கிறேன்'' என்று காரசாரமாகப் பதில் அளித்து நிமிர்ந்து உட்கார்ந்தாள்.

''நீ இன்னும் ஒன்றும் சாப்பிடவில்லையே! பாவம், பட்டினியாயிருக்கிறாயே!'' என்று அவன் கேட்பதற்குள் கோபம் தாங்காத தேவகி, ''என் பட்டினியை விட்டுத் தள்ளுங்கள். நீங்கள் சாப்பிட்டாச்சா, இல்லையா? இல்லா விட்டால், சீக்கிரம் கதவைத் திறந்து விடுங்கள். சமைக்க வாவது ஆரம்பிக்கிறேன்'' என்றாள் குரோதமாக.

''என் ஞாபக மறதியை என்ன சொல்லுவேன் போ! கலெக்டர் வீட்டில் கல்யாணம் முடிந்து இலை போடுகிற சமயத்திலேதான் நீ இன்றைக்கு இங்கே ஊருக்கு வருகிறேன் என்று போட்டிருந்த கடிதம் ஞாபகம் வந்தது. அவ்வளவுதான்! 'சே! என்ன முட்டாள்தனம்! பாவம், தேவகி என்ன செய்கிறாளோ' என்று கவலையோடு காரில் ஏறிக்கொண்டு பத்து மைலையும் பத்துகஜமாக நினைத்துக் கொண்டு பறந்து வந்தேன். வந்து பார்த்தால் அம்மா அவர்கள் நிச்சந்தையாத் தூங்குகிறாள். 'தூங்கட்டும், பாவம்' என்று அப்படியே உட்கார்ந்திருந்தேன். வேலைக்காரன் ஹோட்டலிலிருந்து வாங்கிக்கொண்டு வந்து வைத்திருக்கும் சாப்பாடு டிபன் ஸெட்டிலே ஆறிப் போகிறது. எழுந்திரு ரெண்டு பேரும் சாப்பிடுவோம்!'' என்று நாகராஜன் கனிவுடன் அவள் கரத்தைப் பிடித்து அழைத்தான்.

தேவகியின் கோபமெல்லாம் ஒரே நிமிடத்தில் மறைந்து விட்டது. அதற்குப் பதில், அவள் மனத்தில் இரக்கம் நிறைந்தது. நாகராஜனும் அவளுக்காகப் பட்டினியாகக் காத்திருக்கிறான்! அவள் நினைத்ததுபோல் அசிரத்தையான கணவனா அவன்? சில சமயங்களில் பராமுகமாக இருப்பவனா யிருந்தாலும் அந்த நிமிடம் அவன் அன்பு மயமாகத்தானே தென்பட்டான்! நாகராஜனின் வாயிலிருந்து அன்புச் சொற்கள் வெளிப்படவும் தேவகியின்



வாழ்விலே அபூர்வமான ஒரு சந்தர்ப்பம் நிகழ்ந்தது. அந்த ஒரு நிமிஷத்தை அவனுடன் சண்டையிட்டு ஏன் கெடுத்துக் கொள்ள வேண்டும்?' இவ்வாறு எண்ணிய தேவகி தன் கணவனை மனத்திற்குள் அவன் பிசகிற்காக மன்னித்து விட்டாள்.

''ஒரு மாதமா கடிதமே போடாமல் இருந்தாயே, உன் மனசு என்ன மனசு! கல்லுதான் போ, தேவகி! தினம் கடிதம் வரும் என்று எதிர்பார்த்து ஏமாந்து போனேன். இப்போது உன்னை நான் ஏன் கோபித்துக்கொள்ளாதிருக் கிறேன், தெரியுமா? இனிமேல் பிறந்தகத்தில் போய் மாசக் கணக்காகக் 'காம்ப்'போட உன்னை அநுமதிக்கமாட்டேன், பார்த்துக்கொள்'' என்று கொஞ்சலாக மொழிந்த நாகராஜன் ''தேவகி, அம்மா நாளைக்கு வந்தாலும் வருவாள். 'நாட்டுப்பெண் நாலுமாசம் ஸ்நானம் பண்ணா திருக்கிறாள்; நீ வந்தால் தற்சமயம் உதவியாயிருக்கும்' என்று ஒரு கடிதம் அம்மாவுக்குப் போட்டிருக்கிறேன். நான் செய்தது சரிதானே?'' என்று கொஞ்சலாக அவளது கன்னத்தை வருடினான் நாகராஜன்.

# எல்லைக் காளியின் கோபம்

பொழுது சாயக் கொஞ்ச நேரமேதான் இருந்தது. அபிராமி தண்ணீர்க் குடத்தை எடுத்துக்கொண்டு அவசரமாக வீட்டை விட்டுப் புறப்பட்டாள். ''இருட்டறத்துக்கு முந்தி ஊட்டுக்குத் திரும்பிடு'' என அவள் புறப்படுமுன்பே அவள் தாய் அவளை எச்சரித்தாள். ஆற்றின் கரையோரத்தில் அமைந்திருந்த எல்லைக் காளிக் கோவிலைக்கண்டாலே அந்தக் கிராமத்து ஜனங்கள் எல்லோருக்கும் ஒருவித பீதிதான். அதுவும் அந்தி மயங்கும் சமயம் யாரும் ஆற்றங் கரைப்பக்கம் போகத் துணியமாட்டார்கள். ஏனெனில் அந்த வேளையில் தினமும், ஒரு முகூர்த்த காலம்